# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 562 / 2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **Thiru. Arul** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of March, 2026.

(A2 to A4, A6 are present. A1, A5 are absent, Petition filed and allowed.)

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

**நேரம் 12.20 மணி**

நான் தற்போது மீஞ்சூரில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் பார்த்ததில்லை. கையொப்பம் மட்டும் போட்டேன். எதற்காக கையொப்பமிட்டேன் என்று தெரியாது. 4 ஆம் எதிரி செல்வா என்கிற செல்வகுமார் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக

உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகரில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

07-11-2023 ஆம் தேதி மீஞ்சூர் காவல் நிலையத்தில் செல்வா என்கிற செல்வநாதனை வியாசர்பாடியை சேர்ந்த அஷ்வத்தாமன் மற்றும் அச்சுதன், புகழேந்தி, நந்தா, நரேஷ் ஆகியோர்களோடு மாமூல் கேட்ட வழக்கு விஷயமாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், செல்வா என்கிற செல்வநாதன் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம்கொடுத்தார் என்றும் அதை தொடர்ந்து வழக்கிற்கு பயன்படுத்திய TN 18 AK 0876 என்ற மோட்டார் சைக்கிளை அவர் ஆஜர் செய்தார் என்றும் அதை மகஜரில் போலீசார் கைப்பற்றினார்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும் பாரிவள்ளல் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 562 / 2024**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW4<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **இளமாறன்** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of March, 2026.

**(A2 to A4, A6 are present. A1, A5 are absent, Petition filed and allowed.)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

<u>**முதல் விசாரணை :**</u>

**நேரம் 12.30 மணி**

நான் தற்போது மீஞ்சூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் போட்டேன் என்று ஞாபகமில்லை. தேதியும் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள

முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என் கையொப்பம் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

25-11-2023 ஆம் தேதி நான் என் நண்பர் உதயசூரியன் என்பவருடன் மீஞ்சூர் காவல் நிலையம் சென்றேன் என்றாலும், அந்த நேரத்தில் போலீசார் நரேஷ் என்கிற நரேஷ்குமாரை விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அஷ்வத்தாமன் மற்றும் அச்சுதன், புகழேந்தி, நந்தா, நரேஷ் ஆகியோர்களோடு மோட்டார் சைக்கிள், கார் ஆகியவற்றை பயன்படுத்தி மற்றும் ஒருவரை மிரட்டி கடத்தியதாக வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை தொடர்ந்து அவர் பயன்படுத்திய TN 01 AA 8950 என்ற Indica கார் மற்றும் பதிவெண் இல்லாத Hero Splendor Pro மோட்டார் சைக்கிளையும் அடையாளம் காட்டி ஆஜர் செய்தார் என்றும் அதை நான் மகஜரில் கைப்பற்றினேன் என்றும் மகஜரில் நானும், உதயசூரியனும் கையொப்பம் செய்தேன் என்றும் வாக்குமூலத்தில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.